ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# "கயற்கண்ணி"யில் இயற்கைச் சூழல்

**முனைவர் சி. சொர்ணமாலா**

**உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 18.**

34

**ஆய்வுச் சுருக்கம்**

இயற்கையோடு இயைந்து தம்மை நிலை நிறுத்திக் கொண்ட மனிதன், பஞ்ச பூதங்களுக்குக் கட்டுப்பட்டு அவற்றைக் கடவுளாகவும் கண்டான். அதனால் தான் நிலம், பொழுது இரண்டையும் முதலாக்கி, அவற்றுடன் கரு, உரி என்னும் ஒழுக்கக் கூறுகளால் ஐவகை நிலப் பண்புகளுக்கு ஏற்ப வாழ்வைப் பகுத்துக் கொண்டான். ஆயினும் காலம் மற்றும் பருவ மாறுபாடுகளாலும் மனிதனின் போர்க் குணங்களாலும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியாலும் இன்று இயற்கையும் அது சார்ந்த உயிரினங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அன்றைய காலகட்டத்தில் இயற்கை வளமும் பறவைகள், விலங்குகளின் இயல்பும், வாழ்க்கை முறையும் ஆறறிவு கொண்ட மனிதனையே விஞ்சி நிற்கும் பாங்கினை இலக்கியங்கள் பலவும் உணர்த்தி நிற்கின்றன. அவற்றை ஓரறிவு முதல் ஆறறிவு வரை பாகுபாடும்படுத்தியுள்ளன. நிலம் சார்ந்த சூழல் அமைப்பில் தாவரங்கள், விலங்குகள் மட்டுமின்றி, பறவைகளும் ஓரங்கமாகின்றன. இவை சுற்றுச்சூழலிருந்தும் உணவுச் சங்கிலியின் பட்டியலிலிருந்தும் பிரிக்க முடியாதவை. மற்ற உயிர்களைப்போல் வாழும் உரிமை பெற்ற இந்த உயிரினங்களை நேயத்துடன் மதித்து, அவற்றைப் பேண வேண்டும் என்னும் கருத்தைப் பதிவு செய்துள்ள, கு.வெ.பாலசுப்பிரமணியனின் 'கயற்கண்ணி' என்னும் செய்யுள் நாடகத்தில் இயற்கைச் சூழல் சார் பதிவுகளை ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**

கயற்கண்ணி – கு.வெ. பாலசுப்பிரமணியன் – ஐம்பெரும்பூதத்து இயற்கை – புன்னாட்டு வளம் – ஓரறிவும் ஐந்தறிவும் – காரணக் கதைகளில் உயிரின மாண்பு — பெயர்சுட்டலில் இயற்கை அமைவு - ஐந்தே பெரிது.

**முன்னுரை**

நாடகம் என்பது நாடு + அகம். உள்ளத்தையும் உணர்வையும் பிரதிபலிக்கக்கூடியது; கவரக்கூடியது. சமூகக் கருத்துக்களை வெளிப்படுத்த உதவும் ஒரு கலை அதனால் தான்,

> **"நாடகம் கலைக்கரசு; நாட்டின் நாகரிக்க் கண்ணாடி; பாமர மக்களின் பல்கலைக்கழகம்; உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை"[1] (நாடகக் கலை, ப. 117)**

என்று தி.க. சண்முகம் கூறுகிறார்.

இறைவனின் படைப்பில் மனிதர்கள் மட்டுமல்ல; மரம், செடி, கொடி, மலை, கடல்,

ஆறு உள்ளிட்ட பிற உயிரினங்கள் அனைத்துமே இயற்கை என்னும் பெரும் பிரிவில் அடங்குகின்றன. இயல்பாக அமைவதும் இயல்பாகச் செயல்படுவதும் இயற்கை. அது உலகெங்கும் பரந்து கிடக்கும் பேராற்றல். அந்த இயற்கையோடு இயைந்தவையே பறவைகளும் விலங்குகளும். இலக்கியங்கள் பலவும் இயற்கைச் சூழலுடன் இவற்றின் வாழ்வியலையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பேண வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியே, மனித வாழ்வியலோடு பிணைத்துள்ளன. அவ்வகையில் கு.வெ. பாலசுப்பிரமணியன் எழுதிய 'கயற்கண்ணி' என்னும் செய்யுள் நாடகத்திலும் இயற்கைச் சூழலுடனான உணவுச் சங்கிலியின் உயரிய தொடர்பான பறவையினங்களின் பாசப்பிணைப்பும் பங்களிப்பும் காணக்கிடக்கின்றன. அவற்றை ஆராய்ந்து இக்கால இயற்கைப் பாதுகாப்புக்கான விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கில் இயற்கைச் சூழலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**'ஐம்பெரும்பூதத்து இயற்கை'**

ஓரறிவுயிர் முதல் ஆறறிவு உள்ளிட்ட அனைத்துமே இயற்கை. இந்த உலகம் பஞ்சபூதங்களால் நிரம்பியது. இதனைத் தொல்காப்பியம்,

> **''நிலம் நீர் வளி விசும்பொடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம் இவ்வுலகம்" (தொல்.பொருள். மரபு நூ.எண்.635)**

என்கிறது. வள்ளுவரும்,

> **"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
> **காடும் உடையது அரண்." (குறள். 742)**

என்கிறார். மனிதனால் உருவாக்க முடியாத அல்லது உருவாகாத அனைத்துமே இயற்கை. பண்டைய இலக்கியங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலப்பாகுபாடு செய்து இயற்கையின் அன்றைய அழகையும் அவசியத்தையும் வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியாகின்றன. தனக்குள் எண்ணற்ற கொடைகளைப் பொதிந்து வைத்துள்ள இயற்கையானது, அதன் பயனை வேண்டிய நேரத்தில் மனிதனுக்குக் கொடுத்து, ஒவ்வொருவரின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இத்தகு இயற்கை சார் செய்திகள் 'கயற்கண்ணி' நாடகத்தில் விரவிக் கிடக்கின்றன.

**புன்னாடு – ஏழிற்பொன்மலை வளம்**

புன்னாட்டை ஆண்டு வரும் நன்னன் என்பவன் அவனுடைய ஏழிற்பொன்மலைக்குத் திடீரென பறவைகள் வாராமையை நினைத்து வருந்துகிறான். இந்நிலையில் அந்நாட்டின் வளம் பேசப்படுகிறது. அவனுடைய புன்னாட்டில் நீர்நிலைகள் செழிப்புடன் காணப்பட்ட நிலையும் வளமிகு மரங்கள் மலர்களால் பூத்துக்குலுங்கும் அழகும் வெளிப்படும் இடத்து அந்நாட்டின் இயற்கைச் சூழல் வெளிப்படுகிறது. சான்றாக,

> **"அணைகுள மேரி அனைத்தும் நிறைத்து**
> **வாழையும் நெல்லும் வண்காய்க் கமுகும்**
> **தாழையும் மாவும் தாங்கிய பலாவும்**
> **ஈந்தும் பனையும் ஈண்டிய தென்னையும்" (க.க. 22-25)**

என்று வாழை, கமுகு, மா, பலா, தென்னை, பனை ஆகிய பசும் மரங்கள் மட்டுமின்றி, முல்லை, மல்லிகை, செருந்தி, கரந்தை, காந்தள், மருதம், வழை (சுரபுன்னை), குறிஞ்சி, தாமரை போன்ற மலர்களும் மலர்ந்து மணம் வீசிய பெருமைக்கும் செழுமைக்கும் உரியதாக அந்நாடு இருந்தமையை அறியமுடிகிறது. (க.க. 31-35). இதனை,

**"இயற்கையன்னை எத்தனை முகத்தால்**
**செயற்கை யின்றிச் சிரித்திடக் காட்டும்**
**இம்மண்"…. (க.க. 33-36)**

என்று ஏழிற்பொன்மலையின் இயற்கையழகு, நன்னனின் அமைச்சரான மணிமொழியாரால் கூறப்படும் இடம் அன்றைய இயற்கை வளத்தைக் கண்ணாடியிட்டுக் காட்டுவதைக் கயற்கண்ணியில் காணமுடிகிறது.

சங்க இலக்கியங்கள் இயற்கையை, வாழ்க்கைச் சித்திரிப்புக்கான பின்னணியாகக் கொண்டு திகழ்கின்றன. காப்பியங்களும் உயிரூட்டமான உணர்வுகளையும் கவிஞன் அல்லது ஆசிரியர், வலியுறுத்த விரும்பிய அறக்கருத்துக்களையும் ஒன்றாக்கி வெளிப்படுத்துவதற்கு இயற்கையை ஊடகமாகப் பயன்படுத்தியுள்ளன. கு.வெ.பா.-வின் 'கயற்கண்ணி' நாடகத்திலும் கொண்கானத்து மன்னன் நன்னன், தன் நாட்டுவளத்தைக் கூறுமிடத்து,

**"குன்றா வளந்தரு**
**நன்னாடிதனிடை நலம் பல செறிந்தும்**
**யாறும் குளனும் வாவியும் ஏரியும்**
**நீர்தலை மயங்கிய நெடுவாய்க்காலும்**
**சோலையும் பொதும்பரும் தோப்பும் கானும்**
**சால அமைந்தும்….." (க.க. 54-58)**

என் வரிசைப்படுத்துகிறார். நீர், நிலம், காற்று, அதனிமித்தமான உணவு, உடை, இருப்பிடம் இவற்றை நிறைவாக்கிய நாடே தன்னிறைவு பெற்றதாகும் என்பதைக் "குன்றாவளம்; 'இம்மண்போல இன்னொன்றில்லையே' என்பதான வரிகள் விளக்கி நிற்கின்றன.

புதலும், செடியும் பூங்கொடி வகையும் பல மரங்களின் கூட்டமும், அவை நிறைந்துள்ள பொன் மலைக் குன்றமும், திகழ்கின்ற கான், ஏரி, இவை யாவும் பறவைகளுக்குச் சொர்க்கமாகத் திகழக்கூடியவை; அவை வராது வெறுமையாகும் பொழுது இயற்கை தன் நிலையிலிருந்து மாறுபடும் என்பதை அறிய முடிகிறது.

**ஓரறிவும் ஐந்தறிவும்**

உற்றறிதல், சுவையறிதல், மணமறிதல், கண்டறிதல், கேட்டறிதல் என்னும் ஐந்தறிவுடைய உயிர்கள் பறவைகளும், விலங்குகளும் பிறவும் ஆகும். இதனை,

**''புல்லும் மரனும் ஓரறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (தொல்.பொருள். 572)**

**''மாவும் புள்ளும் ஐயறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (தொல்.பொருள். மரபு.நூ.எ. 576)**

என்கிறது தொல்காப்பியம். இயற்கை அனைத்து உயிரினங்களுக்கும் உணவு, உடை, இருப்பிடம் தருகின்றது. மனிதனின் ஆதி முதல் அந்தம் வரையிலான அனைத்து நிலைகளிலும் நெருங்கிய தொடர்பு உடையவை. பூமியின் வளப்பத்தையும் செழுமையையும் பறைசாற்றுபவை. அவ்வகைளில் ‘கயற்கண்ணி’ நாடகத்தில் பல்வித மரங்களின் பெயர்களும் பறவைகளின் வகைகளும் அக்காலச் சமூகக் கருத்தியலையும் இயற்கைச் சூழலையும் விளக்கி நிற்கின்றன.

**பறவையினங்கள்**

குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99வகையான மலர்களைப் பட்டியலிடுவது போல் (குறிஞ்சி 62-74) கு.வெ. பாலசுப்பிரமணியனும் நாரை, சிட்டு, கொக்கு, கிளி, மயில், கூகை, பருந்து, குயில் உள்ளிட்ட பல இனத்தைச் சார்ந்த பறவைகள் ஏழிற் பொன் மலையில் வந்து குவிந்த சூழலை விவரிக்குமிடத்து,

**“செவ்வரி நாரையும் சிட்டும் கொக்கும்**
**பூவையும் கிளியும் புனமயிலினமும்**
**கூகையும் பருந்தும் குயிலும் புறவும்**
**வங்கா வாவல், வானம் வாழ்த்தி,**
**அன்றில், மகன்றில், அன்னம், எழாஅல்” (க.க. 75-79)**

என்று பட்டியலிட்டு விளக்குகிறார். இதில் வானம்பாடியை ‘வானம் வாழ்த்தி’ என்பது சிறப்புக்குரியது.

**காரணக் கதைகளில் உயிரின மாண்பு**

கயற்கண்ணி நாடகத்தின் உள்ளீடாக பறவை விலங்குகளின் மாண்பினைப் பழைய புராண, இதிகாச, நீதிக் கதைகளை ஒப்பிட்டுச் சொல்லுமிடத்தும் பறவைகளின் மாண்பு பேசப்படுகிறது. சான்றாக, கயற்கண்ணி, எயினன் ஆகியோரின் காதல் வாழ்வை.

**“அன்னப்புள்ளால் அரசாள் நளனொடு**
**கன்னி தமயந்தி காதலுற்றது போல்.” (க.க. 96, 97)**

என்று பொன்னி உவமித்துக் கூறுமிடத்து, தூது பொருளாக அன்னப்பறவை பயன்பட்ட நிலையை விவரிக்கிறாள். மற்றுமோர் இடத்தில் சிங்கமானது சிறு முயலைச் சீண்ட முயலோ அதைக் கூட்டிச் சென்று பெரிய கிணற்றுள் வீழ்த்தியது என்னும் கருத்து சூழ்ச்சி மிகு மிஞிலி கதாபாத்திரம் வழி ஆசிரியர் கூறுமிடத்து விலங்குகள் பண்பு விளக்க வாயில்களாக, நீதி போதனையின் வடிகாலாக விளங்குவதை அறிய முடிகிறது. (களம் 5, 7-10) தொடர்ந்து எயினன் கூற்றாக பறவைகளின் ஒற்றுமை நிலை பேசுமிடத்து புறாவின் பொருட்டு பொன்னுடல் அறிந்த சிபி சக்ரவர்த்தியையும் சீதையை மீட்க இராமனுக்கு உதவிய சடாயுவின் தீரத்தையும் பேசுமிடங்கள் பறவைகளின் மாண்பினை மக்களுக்கு உணர்த்துகின்றன. வேடன் விரித்த வலையில் விழுந்த பறவைகள் எலியின் துணையால் விடுதலை அடைந்ததை விளம்பும் கதை சுட்டுமிடத்துப் பறவைகளின் மதிநுட்பம் வெளிப்படுகிறது.

நுண்ணறிவு உடையவை பறவைகள் பறவைகளிடம் எயினன் பேசுவதாக அமையுமிடத்து, இயற்கையை உறவாக எண்ணிய சங்க கால மக்களின் வாழ்வியலை இந்நாடகம்

வழிமொழிவதாக அமைகின்றது. பறவைகளின் மதி நுட்பத்திற்கு முன் மனிதர்களின் ஆறறிவு தோற்றுப் போகும் நிலையை நாடகக் காட்சிகளும் கருத்தாடல்களும் உணர்த்துகின்றன.

**பெயர் சுட்டலில் இயற்கையமைவு**

கதை மாந்தர்களின் பெயர்ச் சுட்டலில் கூட இயற்கை மணம் கமழ்வதைக் 'கயற்கண்ணி' நாடகத்தில் காணமுடிகிறது. கயற்கண்ணி, முல்லை, அனிச்சம், மலையன் மட்டுமின்றி பேசாதனவற்றையும் பேசச் செய்தல், கேட்காதவனவற்றைக் கேட்குந போலச் செய்தல் எனும் பொருளில் பறவைகளுடன் உரையாடல் நிகழ்த்தியுள்ளமை இனிய இயற்கைச் சூழலை எடுத்தியம்புவதாக உள்ளது.

**பறவைகளின் ஒலியும் குரல் பதிவும்**

பறவைகளின் தொடர்ச்சியான ஒலியானது பல வாத்தியங்களை ஒத்த இசையொலியாக விரும்பட்ட நிகழ்வை,

**"மென்காலன்னமும் விரிசிறை வாவலும்**
**குயிலும் மயிலும் கொக்கும் பூவையும்**
**அன்றிலும் ஆந்தையும் ஆனைச் சாத்தனும்**
**குழீஇ மரீஇ கூவிக் குழறும்**
**நிறை பல்லியத்தை நிகர்க்கும் குரலொலி**
**விரைவில் காண வேந்தர் கருதினர்!" (104-109)**

என்ம் வரகள் எத்தியம்புகின்றன. அந்தந்த பறவையினங்களின் குரல் பதிவை,

**"குக்கூ என்றேயோர் குயிலும்**
**அக்கோய் என்றொரு புள் அழைக்க**
**மற்றொன்று பாடுதே**
**கோவைக் கிளி மொழியே**
**கூவும் இசைக்குயிலே"**

என்று சுட்டுமிடத்து, பறவைகளின் ஒலியிசையினை அனுபவிக்கும் இன்பத்தையும் சூழலையும் மட்டுமின்றி 'புள்ளினைப் பிள்ளையாய்க் கொண்ட முன்னோர்களின் இயற்கை சார் பாசப்பிணைப்பை அறியமுடிகிறது. சூழ்ச்சிக்காரனான மிஞிலியை சந்தித்து, திருத்தலாம் என்று செல்லும் எயினனைப் பறவைகள் தடுக்கின்றன. ஆயினும் அவைகளை மீறியே எயினன் செல்கின்றான். வருமுன் உணர்த்துகின்ற ஐந்தறிவு உயிரினங்களின் அறிவுத்திறன் அவற்றின் குரல் பதிவு வழி மனிதனுக்கு அறிவுறுத்தப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

**ஐந்தே பெரிது….**

**"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்" (நூ.19)**

என்கிறது தொல்காப்பியம். தன்னுடைய இயல்பிலிருந்து மாறாது அல்லது திரியாது உள்ள பொருளை அதனுடைய இயல்பான ஆக்கமும் காரணமும் கெடாமல் விளக்குவது இயற்கை எனலாகிறது. அவ்வகையில் உயிரினங்களின் மாட்சிமையை அதன் இயல்பு கெடாமல் ஆசிரியர் பதியவைத்துள்ளார்.

'உறவுகள் இன்றி, துன்பத்திலும் நோயிலும் வீழ்ந்த போது, கிளி, சிட்டுக்குருவி, சிரல்,

பூவை, பட்டாம்பூச்சி உள்ளிட்ட பறவைகள் உற்ற உயிரத்துணையானமையைப் பறவைகளிடத்துப் பற்றும் பாசமும் வைத்திருந்த எயினன் என்னும் கதை மாந்தர் வழி விளக்குகிறார். ஆறறிவு கொண்ட மனிதனுக்கே அன்பையும் மனிதநேயத்தையும் நேர்மையையும் கற்றுத்தருவன ஐந்தறிவு உயிர்கள் என்பதை,

**“ஆவெனப் பசுவும் கோவெனக் கோழியும்**
**காவெனக் காக்கையும் கீஎனக் கிளியும்**
**அம்மெனப் புறவும் ஐயென வாத்தும்**
**இம்மென வண்டும் இயல் நெடுங்கணக்கை**
**ஆசானாக அறிவுறச் செய்தன” (க.க. 102-106)**

என்று எயினன் கூற்றிவழி அறிய முடிகிறது.

**“ஐந்து பெரிது ஆறு சிறிது” (வைரமுத்து கவிதை)**
**https://eluthucom kavignar –kavithai)**

என்று வைரமுத்து கூறுவதை மெய்ப்பிப்பது போல், இறந்துபட்ட எயினனின் உடலைக் கண்டு பறவைகள் கதறி அழுது அவன் உடல் மேல் வெயில் படாமல் சிறகால் விரித்து காத்து நின்றமை, ‘ஐந்தே பெரிது’ என்பதை நிரூபிப்பதாக உள்ளது. இறுதியில் எயினன் போற்றிய உயிரிடத்து அன்பு என்னும் நெறியை அவன் மறைவுக்குப்பின் கயற்கண்ணி ஏற்பதாக நாடகம் நிறைவுறுகிறது. உயிரினங்களைத் தொடர்ந்து வரும் அடுத்தடுத்த தலைமுறையினர் கண்டிப்பாக பாதுகாக்க வேண்டும் என்னும் முடிவால் இயற்கைச் சூழலின் முக்கியத்துவம் நாடகம் வழி உணர்த்தப்படுகிறது.

**“நொந்தும் இளைத்தும் நோய்நொடி வீழ்ந்தும்**
**அலமரும் காலை பழகிய தோர் கிளி**
**அழுதிட அழுதும் சிரித்திடச் சிரித்தும்**
**விளையாட்டெனக்கே மிகவும் செய்திட**
**உலைவுறும் கூண்டின் உள்ளிருந்ததனை**
**வெளிவர விடுதத்தில் மகிழ்ந்தது கிள்ளை!”**

கிள்ளையைக் கூட்டிலிருந்து விடுவித்ததால் கிளியானது எயினனுக்குக் கனிகளையும், கதிர்களையும் கொடுத்தது என்பதாக ஆசிரியர் கூறுவதிலிருந்து பறவைகளின் நன்றி மறவாப் பண்பினையும் அன்பு நெறியினையும் அறியமுடிகிறது.

எந்த விலங்குகளும் பகையால் எவரையும் துன்புறுத்துவதில்லை. பசித்தால் மட்டுமே புலி இரையை உண்ணும். நலிவுறுங் காலே நாகமும் கடிக்கும். மதம் கொள்ளும் போது தான் சினமிக்க களிறு தாக்கும். சீண்டும் போது தான் சிங்கமும் சீறும். ஆனால் மனிதர்களோ கனியுள் விதை போல கடும்பகையை மனதுள் வைத்து, பிறர்க்குத் தீமை செய்வதையே இயல்பாகக் கொண்டுள்ளனர். என்னும் கருத்து வழி ஐந்தே பெரிது என்பது புலப்படுகிறது. (களம்.1, பக் 1-12)

**முடிவுகள்**

- கயற்கண்ணி நாடகத்தில் அழகிய பசுமையாக இயற்கைச் சூழலும் அது சார்ந்த உயிரினங்களும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

- கதை மாந்தர்களின் உரையாடலின் ஊடே இயற்கையின் மாண்பு எடுத்தியம்பப்படுகிறது. குறிப்பாக மரங்கள் மற்றும் பறவைகள் விலங்குகளின் பெயர்களும் அவற்றின் வாழ்வியலும் மனிதப் பண்பை விட சிறப்பாக முன்னிறுத்தப்படுகின்றன.
- பறவைகளின் உதவும் பண்பு, நன்றி மறவா நிலை, அன்பு உள்ளிட்டவை இந்நாடகத்தில் ஆசிரியரால் நன்னன், எயினன், மணிமொழியார், கயற்கண்ணி, பொன்னி, மிஞிலி, அண்ணாமலை உள்ளிட்ட கதைமாந்தர்கள் படைப்பின் ஊடே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- புன்னாட்டின் வளம், ஓரறிவு ஐந்தறிவு உயிர்களின் மாண்பு, காரணக் கதைகளின் ஊடே அவற்றின் பண்பு போன்ற செய்திகள் நாடகக் கதையோட்டத்திற்கு உறுதுணையாக நிற்கின்றன.
- இலக்கியக் காலகட்ட இயற்கையை இன்றும் இனியும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் ஆர்வத்தையும் இந்நாடகம் இளைய தலைமுறைக்கு எடுத்துச்செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

**முதன்மை ஆதாரம்**

1. பாலசுப்பிரமணியன், .கு.வெ.,- கயற்கண்ணி (செய்யுள் நாடகம்), அனுராதா ஏஜென்ஸிஸ், சென்னை-17.

**துணைமை ஆதாரங்கள்**

1. கடிகாசலம், .ந., (ப.ஆ.)- சங்கப்புலவரின் பல்துறை அறிவு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 1.
2. கருப்பசாமி, .சோ., - கா. நமச்சிவாயரின் நாடகங்கள்-ஓர் ஆய்வு, தி.க. பதிப்பகம்,சென்னை-51, 1990.
3. சண்முகம், .தி.க., - நாடகக் கலை, அவ்வை பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு,1972.
4. சுப்பிரமணியன், .ச.வே., - தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1999.
5. நாஞ்சில் ஆனந்தன், - சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள், மனித உரிமைகள்,கண்மணி பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு, 1999.
6. வரதராசனார், .மு., - திருக்குறள் தெளிவுரை, கழக வெளியீடு, 1991.